297

28 SEP 2021

53324

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை -விருதுநகர் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான திரு.வீ.புங்கராஜ், உதவியாளர் என்பவரின் மகன் திரு.பு.மனோவிக்னேஷ் பூபாலகண்ணா, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.அ.4) துறை**

**அரசாணை (4ப) எண்:16** **நாள்: 13.09.2021**

பிலவ, ஆவணி 28,

**திருவள்ளுவர் ஆண்டு–2052,**

படிக்கப்பட்டவை:

1. விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை எண்.ப்பி3/20815/2018, நாள் 10.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.19829/2020/டி3, நாள் 16.07.2020 மற்றும் 08.03.2021.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து 23.05.2018 அன்று காலமான திரு.வீ.புங்கராஜ் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.பு.மனோ விக்னேஷ் பூபால கண்ணா என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், விருதுநகர்

(த.ம.பா)

மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு அத்தனியர் 27.01.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.பு.மனோ விக்னேஷ் பூபால கண்ணா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 24.07.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 12.06.1998 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 19 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 20 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 21 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து, விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.பு.மனோ விக்னேஷ் பூபால கண்ணா என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 27.01.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா எண்.14536/ட்டி-1/2021, நாள் 26.08.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அலுவல் சாரா எண்.26952/ஜி.1/2021-1, நாள் 02.09.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**K.கோபால்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி , இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், விருதுநகர் மாவட்டம்.

**நகல்:**
திரு.பு.மனோவிக்னேஷ் பூபாலகண்ணா, இளநிலை உதவியாளர்.
ஊரக வளர்ச்சிப் பிரிவு, விருதுநகர் மாவட்டம்.
(**வழி**: மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
உதிரி / இருப்புக் கோப்பு.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**

20/9/21